# சார்பு நீதிமன்றம், கள்ளக்குறிச்சி.

முன்னிலை - திரு.சி. ராஜலிங்கம், பி.ஏ., பி.எல்.,
சார்பு நீதிபதி, கள்ளக்குறிச்சி.

2020ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 4ஆம் நாள் செவ்வாய்கிழமை.

அசல் வழக்கு எண்.1/2017

1. வெங்கடேசன், த/பெ.ஆறுமுக செட்டியார், வயது 48,
2. தேவேந்திரன், த/பெ.ஆறுமுக செட்டியார், வயது 46,
3. காசிவிஸ்வநாதன், த/பெ.ஆறுமுக செட்டியார், வயது 38

அனைவரின் இருப்பிடம் சு.கள்ளிப்பாடி கிராமம்,
சங்கராபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். ... வாதிகள்

/எதிர்/

1. ஆறுமுக செட்டியார், த/பெ.அப்பாவு செட்டியார், வயது 85,
2. சந்திரசேகரன், த/பெ.ஆறுமுக செட்டியார், வயது 42,
3. ராமலிங்கஜோதி த/பெ.ஆறுமுக செட்டியார், வயது 39,
4. பிரபு (எ) பிரபாகரன் த/பெ.ஆறுமுக செட்டியார், வயது 36
5. வத்சலா த/பெ.ஆறுமுக செட்டியார், வயது 58

அனைவரின் இருப்பிடம் சு.கள்ளிப்பாடி கிராமம்,
சங்கராபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். ... பிரதிவாதிகள்

தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு 3/8 பங்கு பாகத்தை நிர்ணயம் செய்து ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கும்படிக்கும் மற்றும் வழக்கின் செலவுத்தொகைக்கும் வேண்டி இத்தாவா.

தாவா தாக்கலான நாள்-02.01.2017, தாவா சொத்தின் மொத்த மதிப்பு ரூ.8,00,000/- வாதிக்குரிய 3/8 பாக மதிப்பு ரூ.3,00,000/- இதற்கு தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக் கட்டண சட்டப்பிரிவு 37(2)-ன்படி ரூ.750/- நீதிமன்ற முத்திரைக் கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது.

இந்த தாவாவிற்கு வழக்குமூலம், சங்கராபுரம் வட்டம், சு.கள்ளிப்பட்டாடி கிராம எல்லையிலும், வாதிகள் பிரதிவாதிகளிடம் தங்களுக்குரிய 3/8 பாகத்தை பிரித்து கொடுக்கும்படி பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் நேரடியாக கேட்ட காலமான 20.12.2016 முதல்

இவ்வழக்கு இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து, இறுதியாக இந்நீதிமன்றம் முன்பு 28.11.2019 அன்று விசாரணைக்கு வந்தபோது, வாதிக்காக வழக்கறிஞர் திரு. ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்களும், 1ஆம் பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திரு. எம்.தட்சணாமூர்த்தி அவர்களும், 2 முதல் 4 பிரதிவாதிகளுக்காக வழக்கறிஞர் திரு.வி.ஆனந்தன் அவர்களும் ஆஜராகி வந்த இந்த வழக்கில், போதிய கால அவகாசம் அளித்தும் 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாததாலும், பிரதிவாதிகளுக்காக யாதொரு பிரதிநிதித்துவமும் இல்லாததாலும், 5ஆம் பிரதிவாதி அழைப்பாணையை பெற்றுக்கொண்டும், பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததாலும், அவர்கள் தோன்றாத் தரப்பினர்களாக கருதப்பட்டு ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்ட நிலையிலும், வாதிகள் தரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்பாணை**

1. வாதிகள் தாவாவில் கோரியுள்ளபடி, வாதிகளுக்கு தாவா சொத்தில் 3/8பாகம் உரிமை உள்ளது என நிர்ணயம் செய்து முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.
2. செலவுத்தொகை இல்லை.

செலவுத்தொகைப்பட்டியல்

வாதி தரப்பு    பிரதிவாதி தரப்பு

---தாக்கல் இல்லை---

**சொத்துவிவரம்**

விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், சு.கள்ளிப்பாடி கிராம எல்லை,

| வ.எண். | சர்வே எண். | விஸ்தீரணம் | மதிப்பு (ரூ.பை.) |
|---|---|---|---|
| 1. | அ.ந.ச.87/12 | - 0.06.5 ஏர்ஸ் நிலம் | 12,000.00 |
| 2. | அ.ந.ச.87/13 | - 0.07.5 ஏர்ஸ் நிலம் | 14,000.00 |
| 3. | அ.ந.ச.87/15 | - 0.08.5 ஏர்ஸ் நிலம் | 16,000.00 |
| 4. | அ.ந.ச.87/16 | - 0.07.0 ஏர்ஸ் நிலம் | 14,000.00 |
| 5. | அ.ந.ச.87/18 | - 0.04.5 ஏர்ஸ் நிலம் | 10,000.00 |
| 6. | அ.ந.ச.88/10 | - 0.04.0 ஏர்ஸ் நிலம் | 8,000.00 |
| 7. | அ.ந.ச.16/10பி | - 0.04.0 ஏர்ஸ் நிலம் | 8,000.00 |
| 8. | அ.பு.ச.46/3 | - 0.50.0 ஏர்ஸ் நிலம் | 60,000.00 |

9. அ.பு.ச.48/5ஏ - 0.85.5 ஏர்ஸ் நிலம் 1,00,000.00

10. அ.பு.ச.48/8ஏ - 0.30.0 ஏர்ஸ் நிலம் 50,000.00

11. அ.பு.ச.48/8பி - 0.30.0 ஏர்ஸ் நிலம் 50,000.00

12. அ.பு.ச.50/4 - 0.39.5 ஏர்ஸ் நிலம் 60,000.00

13. அ.பு.ச.70/4 - 0.29.0 ஏர்ஸ் நிலம் 40,000.00

14. அ.பு.ச.76/1ஏ - 0.24.0 ஏர்ஸ் நிலம் 30,000.00

15. அ.பு.ச.76/1பி - 0.23.0 ஏர்ஸ் நிலம் 30,000.00

16. அ.பு.ச.76/1சி - 0.22.5 ஏர்ஸ் நிலம் 38,000.00

17. அ.பு.ச.76/1டி - 0.22.0 ஏர்ஸ் நிலம் 60,000.00

18. அ.பு.ச.76/1ஈ - 0.20.0 ஏர்ஸ் நிலம் 50,000.00

19. அ.பு.ச.76/1எப் - 0.22.0 ஏர்ஸ் நிலம் 50,000.00

10. அ.ந.ச.89/13 - 0.48 0 ஏர்ஸ் நிலமும், அதில் உள்ள
கிணறு மோட்டார் இவைகளில் 1/3 பாகம் மதிப்பு 50,000.00

11. அ.பு.ச.87/11 - 0.38.5 ஏர்ஸ் நிலமும், அதில் உள்ள கிணறு மற்றும்
மின்மோட்டார், மின் இணைப்பு எண்.224, இவைகளில் 1/3 பாகம் 50,000.00

ஆக மொத்தம் 8,00,000.00

இதில் வாதிகள் கோருகிற 3/8 பாகத்தின் மதிப்பு ரூ.3,00,000.00

2020ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 4ஆம் நாள் எனது கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இட்டு வழங்கப்பட்டது.

சார்பு நீதிபதி,
கள்ளக்குறிச்சி.

தீர்ப்பாணை
அ.வ.எண்.1/2017
நாள் - 04.02.2020